திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்

MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)

Open Access & Peer Reviewed Journal

E-ISSN : 2583-0449

Beliefs of Ancient Tamizh People in Ten Idylls (Pattuppattu)

S. Mohamed Azrin[1], Dr. T. Selvaraju[2]

Ph.D. Research Scholar (Full-Time)[1], Associate Professor[2], PG & Research Department of Tamil, Jamal Mohamed College (Autonomous), Tiruchirappalli, India

Manuscript ID : **MT10A0081**

Volume : **2**

Issue : **4**

Month : **December**

Year : **2022**

Received: 17.10.2022
Revised: 22.10.2022
Accepted: 31.10.2022
Published: 04.11.2022

Pages : 40-47

DOI: 10.5281/zenodo.7372291

ABSTRACT:

This paper delineates the various beliefs of our ancestors found in the Pattuppaṭṭu (known as Ten Idylls / Ten Lays in English) poetic lines, which was sung by Eight poets. The ancient Tamizh people strongly believed that the sounds created by the birds and animals must create a positive or negative impact to them. They also had a strong faith in astrology, augury, choromania, demons etc. The first grammatical book, Tholkappiyam also denotes about the faiths and beliefs of ancient Tamizh People in sake, demons & augury are also taken as supporting evidence for this study. Thus, this paper tries to reveal the beliefs of our ancient era found in the Ten Idylls.

KEYWORDS:

Pathuppaattu (Ten Idylls), Belief, Demon, Sake, Augury

பத்துப்பாட்டில் பழந்தமிழ் மக்களின் நம்பிக்கைகள்

ஷா. முஹம்மது அஸ்ரின்[1], முனைவர் த. செல்வராசு[2]

முனைவர் பட்ட ஆய்வாளர் (முழு-நேரம்)[1], இணைப்பேராசிரியர்[2]

முதுகலைத் தமிழாய்வுத்துறை, ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி),

திருச்சிராப்பள்ளி, இந்தியா

கட்டுரைச் சுருக்கம்

சங்ககால மக்களின் வாழ்க்கையை அறிந்து கொள்ள உதவும் களஞ்சியமாகச் சங்க இலக்கியங்கள் திகழ்கின்றன. அக்கால மக்களின் வாழ்க்கை முறையை அகம், புறம் என முறையாகப் பகுத்துப் பழந்தமிழ் மக்களின் வரலாற்றையும் பண்பாட்டையும் புலவர்கள் பாடல்களாகப் பாடியுள்ளனர். எட்டு புலவர்களால் பாடப்பட்ட பத்துப்பாட்டில் நிமித்தம் பார்த்தல், குறி கேட்டல் மற்றும் பேய் குறித்த நம்பிக்கைகள் இடம்பெற்றுள்ளன. சங்க இலக்கியங்களுக்கு இலக்கண நூலாக விளங்கும் தொல்காப்பியத்திலும் இடம்பெற்றுள்ளன. இக்கட்டுரையில் பத்துப்பாட்டில் இடம்பெற்றுள்ள பழந்தமிழ் மக்களின் நம்பிக்கைகளை முறையாகப் பகுத்து ஆராய முனைகிறது.

கருச்சொற்கள்

பத்துப்பாட்டு, நம்பிக்கை, பேய், நிமித்தம், குறி

முன்னுரை

சங்ககால மக்களின் திணைசார் வாழ்வியலைப் படம்பிடித்துக் காட்டுவன சங்க இலக்கியங்கள் ஆகும். அவை தொகையும் பாட்டும் என்று இரு பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. இவ்விலக்கியங்கள் வாயிலாக அக்கால மக்களின் உணவு, உடை, தொழில், பண்பாடு, விருந்தோம்பல், நம்பிக்கை, வீரம், கொடை, காதல், நட்பு ஆகியவற்றை அறியமுடிகிறது. இக்கட்டுரையில் பத்துப்பாட்டில் இடம்பெற்றுள்ள நிமித்தம் பார்த்தல், குறி கேட்டல் மற்றும் பேய் பற்றிய சங்ககால மக்களின் நம்பிக்கைகள் ஆராயப் பெறுகிறது.

நம்பிக்கை - விளக்கம்

'நம்பு' என்னும் சொல்லை அடியாகக் கொண்டே **'நம்பி'** என்ற சொல் தோன்றியுள்ளது. சங்க இலக்கியங்களுக்கு இலக்கண நூலாக விளங்கும்

தொல்காப்பியத்தில், **"நம்பு மேவு நசையா கும்மே" (தொல்.சொல்**.329) என்ற நூற்பாவழி '**நம்பு**' என்னும் சொல்லானது '**விருப்பம்**' என்ற பொருளில் விளங்குவதை அறியலாம்.

அறிவியல் முன்னேற்றம் கண்ட இக்கால மக்கள், அன்றைய சமுதாயத்தினரின் பெரும்பாலான நம்பிக்கைகளை ஏற்றுக்கொள்வதில்லை. நம் முன்னோர்கள் விட்டுச்சென்ற எச்சமாக இன்றும், சில பகுதிகளில் அக்கால மக்களின் நம்பிக்கைகளைக் காணமுடிகிறது. 'ஜக்கம்மா சொல்றா, நல்ல காலம் வரப்போகுது!' என ஒலிக்கும் குடுகுடுப்பையும், திருமணத்திற்குப் பொருத்தம் பார்ப்பதும், 'போன ஜென்மத்துல செஞ்சதுக்கு இப்ப பாடாப்பட்றே!' என்ற மக்களின் பேச்சும், நல்ல நேரம் (நிமித்தம்) பார்த்து செயல்களை செய்தலும், பேய் கதைகளும் நவீன உலகில் நம்மோடு கலந்துவிட்ட சங்ககால நம்பிக்கைகளின் எச்சங்களே.

1. பேய்

ஒருவர் இறந்த பிறகு உருவமற்றுச் சஞ்சரிப்பதாக நம்பப்படும் அமானுஷ்யமான தீய சக்தியே '**பேய்**' என்னும் பெயரால் அழைக்கப்படுகிறது. தமிழின் முதல் இலக்கண நூலாகத் திகழும் தொல்காப்பியத்தில், போரில் ஏற்பட்ட காயத்தால் வருந்தும் மறவனைப் பேய்கள் பாதுகாப்பதாக அமையப் பாடப்படும் காஞ்சி திணையைப் '**பேய்க்காஞ்சி**' எனக் கூறப்பட்டுள்ளது.

"பேஎய் ஓம்பிய பேஎய்ப் பக்கமும்" **(தொல்.பொருள்**.77:6)

மேலும், பேய்களிடம் இருந்து புண்பட்டுக் காயத்தால் வருந்தும் கணவனை மனைவி பாதுகாப்பதாக அமையப் பாடுவது '**தொடாக்காஞ்சி**' என்று கூறுகிறது.

"இன்னகை மனைவி பேஎய்ப் புண்ணோன்
துன்னுதல் கடிந்த தொடாஅக் காஞ்சியும்" **(தொல்.பொருள்**.77:10-11)

சங்ககாலப் புலவர்களான பேயனார், பேய்மகள் இளவெயினி ஆகியோரின் பெயர்களும் அக்கால மக்கள் பேய்கள்மீது கொண்டுள்ள நம்பிக்கையை புலப்படுத்துகிறது.

பேய்களுக்குக் '**கழுது**', '**கடி**', '**மண்ணை**', '**குணபாசி**', '**பிசாசு**', '**அலகை**', '**வேதாளம்**', '**கூளி**', '**அழன்**', '**சவம்**', '**குணுங்கு**' ஆகிய வேறு பெயர்களும் உண்டு. பேயில் ஒரு சாதி '**கழுது**' என்ற பெயரால் அழைக்கப்படும் எனக் கூறுகிறார் நச்சினார்க்கினியர் (சாமிநாதையர், உ.வே. 1986. ப.411). கண்டோரை அஞ்ச வைக்கும் பேய்களும், துன்பத்தைத் தரக்கூடிய தெய்வங்களும் கழுதுடன் சேர்ந்து மதுரை மாநகரில் சுழன்றதாக மாங்குடி மருதனார் பதிவு செய்துள்ளார்.

"பேயு மணங்கு மிருவுகொண் டாய்கோற்
கூற்றக் கொ.்.றேர் கழுதொடு கொட்ப" (**மதுரைக்காஞ்சி**. 632)

"கவையடிக் கடுநோக்கத்துப்
பேய்மகளிர் பெயர்பாட" (**மதுரைக்காஞ்சி**. 162-163)

பேய்மகள் தலைமுடிகள் எண்ணெய் தேய்க்காமல் காய்ந்தும், பற்கள் வரிசையின்றியும், கொடூரமான பிதுங்கிய கண்களுடனும் காணப்படுவாள். போர்க்களத்தில் இறந்த வீரர்களின் கண்களை உண்ட புலால் நாற்றத்துடனும், கண்கள் இல்லாத மண்டை ஓட்டினைப் பிறர் அஞ்சி நடுங்கும்படி கையில் ஏந்தியும் காட்சி கொடுப்பதாக அமைந்த,

"உலறிய கதுப்பிற் பிறழ்பற் பேழ்வாய்ச்
சுழல்விழிப் பசுங்கட் சூர்த்த நோக்கிற்
கழல்கட் கூகையொடு கடும்பாம்பு தூங்கப்
பெருமுலை யலைக்குங் காதிற் பிணர்மோட்
டுருகெழு செலவி னஞ்சுவரு பேய்மகள்
குருதி பாடிய கூருகிர்க் கொடுவிரற்
கண்டொட் டுண்ட கழிமுடைக் கருந்தலை
யொண்டொடித் தடக்கையி னேந்தி வெருவர
வென்றடு விறற்களம் பாடித்தோள் பெயரா
நிணந்தின் வாய டுணங்கை தூங்க" (**திருமுருகாற்றுப்படை**. 47-56)

என்ற பாடல் அடிகள் துணங்கைக் கூத்தாடும் பேயின் முழுமையான உருவத்தைக் கண்முன் காட்சிப்படுத்துகிறது. **"துணங்கையஞ் செல்வி"** (**பெரும்பாணாற்றுப்படை**. 459) என்பதற்கு நச்சினார்க்கினியரின் உரை வாயிலாகப் பேய்கள் ஆடும் கூத்து '**துணங்கைக் கூத்து**' என்பதை அறிய முடிகிறது.

மேலும், மேல்நோக்கி எரிகின்ற நெருப்புப் போல நாவையும், புலாலை உண்டு சிரித்துக் கொண்டும் பேய் காட்சியளிக்கும் என்பதை,

"எரிமறிந் தன்ன நாவி னிலங்கெயிற்றுக்
கருமறிக் காதிற் கவையடிப் பேய்மக
ணிணனுண்டு சிரித்த தோற்றம் போல" (**சிறுபாணாற்றுப்படை**. 196-198)

"பிணங்கோட்ட களிற்றுக்குழம்பி
னிணம்வாய்ப்பெய்த பேய்மகளிர்" (**மதுரைக்காஞ்சி**. 24-25)

என்ற பாடல் அடிகள் வழியாகவும் பிணங்களை உண்ட பேய்கள் துணங்கைக் கூத்து ஆடியதையும் அறிய முடிகிறது.

2. நிமித்தம்

'**நிமித்தம்**' என்னும் சொல்லிற்குத் தமிழ்ப் பேரகராதி '**காரணம்**', '**சகுனம்**', '**அடையாளம்**', '**பொருட்டு**' (Tamil Lexicon, Vol. IV, 2254) என்று பொருள் உணர்த்துகின்றது. நிமித்தம் என்ற சொல் தொல்காப்பியராலும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

"புணார்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்
ஊடல் அவற்றின் நிமித்தம் என்றுஇவை
தேருங் காலை திணைக்குஉரிப் பொருளே" (**தொல்.பொருள்**.16)

"மன்னும் நிமித்தம்" (**தொல்.பொருள்**.39:2)

நிமித்தங்கள் அவற்றின் விளைவுகளால் இருவகைப்படுகின்றன. நற்பயன் விளைவிக்கும் நிமித்தங்கள் '**நல்ல நிமித்தங்கள்**' எனவும், தீய பயனை விளைவிக்கும் நிமித்தங்கள் '**தீய நிமித்தங்கள்**' எனவும் பகுக்கப்படுகின்றன. மேலும், நாட்டுக்குத் தீங்கு வந்தால் இலைகளை உதிர்த்துச் சகுனம் காட்டும் மரமாக '**உன்னம்**' என்ற மரம் தொல்காப்பியர் காலத்தில் திகழ்ந்துள்ளது. இதனை, **"உடல்வேந்து அடுக்கிய உன்ன நிலையும்" (தொல்.பொருள்**.63:8) என்ற சூத்திரம் எடுத்தியம்புகிறது.

சங்கு, புல்லாங்குழல், வீணை ஆகியவற்றின் ஓசைகள், ஆலய மணி ஓசை, நீர் நிரம்பிய குடம், பிணம் அல்லது பசுமாடு எதிரே வருதல் ஆகியன நல்ல பலன்களைத் தரக்கூடிய நன் நிமித்தமாகக் கருதப்படுகின்றன. விளக்கு அணைதல், தண்ணீர் பாத்திரம் சாய்ந்து நீர் வெளியேறுதல், அணிந்த ஆடையில் தீப்பற்றுதல், ஒற்றைத் தும்மல், வீட்டில் மரம் முறிதல், புறா எழுப்பும் ஓசை, விலங்கு இறந்த செய்தியைக் கேட்டல், பாயை ஊன்றி வைத்தல், தலைகீழாகப் பிரண்டு காட்சியளிக்கும் காலணிகள் ஆகியவை தீய சகுனமாக (நிமித்தமாக) கருதப்படுகின்றன.

i. விரிச்சி கேட்டல் (மக்கள், மாக்கள் & புட்களின் ஒலிகள்)

ஒரு காரியத்தைச் செய்யக் கிளம்பும் முன், அதை அறியாத ஒருவரின் (மக்களின்) நற்சொல்லோ அல்லது பிற உயிரினங்கள் (விலங்கு, பறவை) ஆகியவற்றின் ஓசை காதில் விழுந்தால் நல்லது என்பது பழந்தமிழர் நம்பிக்கை. அத்தகைய நற்சொல்லையோ ஓசையையோ எதிர்ப்பார்த்துக் காத்திருத்தல் **"விரிச்சி கேட்டல்"** எனப்படும். இதனை விரித்துக் கற்பனை செய்யப்படும் மனத்தோற்றம் அல்லது மனமாயை என்றும் அறிவியலாளர்கள் கூறுவர். இவ்விரிச்சி கேட்டலைப் **"பாக்கத்து**

விரிச்சி" (தொல்.பொருள்.61:1) என வெட்சித் திணையின் துறைகளுள் ஒன்றாகத் தொல்காப்பியர் கூறுயுள்ளார்.

நெல்லைத் தூவி தெய்வத்தை வணங்கும் முல்லை நிலத்தில் வாழும் மக்கள் நற்சொற்களுக்காகக் காத்து நின்றதை நப்பூதனாரின் நெஞ்சாற்றுப்படைப் பாடல் அடிகள் புலப்படுத்துகின்றன.

"............ .... நெல்லொடு
நாழி மொண்ட நறுவீ முல்லை
யரும்பவி ழலரி தூஉய்க் கைதொழுது
பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்ப" **(முல்லைப்பாட்டு.** 8-11)

இரவு மறைந்து பொழுது விடியும்போது பறவையின் ஓசையைக் கேட்டு செல்லுமாறு கூத்தருக்கு அறிவுறுத்துவதாக அமைந்த,

"புலரி விடியற் புள்ளோர்த்துக் கழிமின்" **(மலைபடுகடாம்.** 448)

பெருங்கௌசிகனாரின் பாடல் அடிகள் வழியாகச் சங்ககால மக்கள் பறவைகளின் ஓசையை நிமித்தமாகக் கொண்டுள்ளனர் என்பது புலனாகிறது. மேலும், தொல்காப்பியரும் தனது நூலில்,

"நாளும் புள்ளும் பிறவற்றின் நிமித்தமும்" **(தொல்.பொருள்.**88:17)

என்ற நூற்பா வாயிலாகவும் தமிழ் மக்கள் பறவைகளின் ஓசையைக் கொண்டு நிமித்தம் பார்த்தனர் என்பதற்குச் சான்றாக அமைகின்றது.

தலைவனைப் பிரிந்து வருந்தும் தலைவி ஆயர்மகளிடம் நற்சொல் கேட்டதாகத் தோழி கூறுகிறாள். பசுவைப் பிரிந்த கன்றுக்குட்டியிடம் 'உன் தாய் விரைவில் வரும்' என்ற ஆயர்மகளின் கூற்றை நன்னிமித்தமாகக் கொண்ட தோழி, 'உன் தலைவன் விரைவில் வருவான்' எனத் தலைவியிடம் கூறுகிறாள்.

"கொடுங்கோற் கோவலர் பின்னின் றுய்த்தர
வின்னே வருகுவர் தாய ரென்போ
ணன்னர் நன்மொழி கேட்டன ...." **(முல்லைப்பாட்டு.** 15-17)

என்பது தொல்காப்பியர் கூறும் **"ஆவொடு பட்ட நிமித்தம் கூறலும்"** (தொல்.பொருள்.175:3) என்ற நூற்பாவோடு பொருந்துகிறது.

3. குறி பார்த்தல்

குறி என்ற சொல்லுக்கு 'யோகம்' என்பது பொருள் (நாகசாமி, இரா. 1983, பக். 46). சங்க காலத்தில் வாழ்ந்த தமிழ் மக்கள் குறி பார்த்தலில் நம்பிக்கைக் கொண்டிருந்தனர். அவர்கள் வாழ்வில் குறி பார்க்கும் மரபு தவிர்க்க முடியாத நம்பிக்கையாக இன்றும் சில கிராமங்களில் காணமுடிகிறது. இதனைக்,

"கட்டினும் கலங்கினும் வெறிஎன இருவரும்
ஒட்டிய திறத்தால் செய்திக் கண்ணும்" (**தொல்.பொருள்.**113: 3-4)

என்ற சூத்திரம் இரண்டு வகையான குறி பார்க்கும் மரபு தொல்காப்பியர் காலத்திலேயே நடைமுறையில் இருந்ததைக் காட்டுகிறது.

i. கட்டுக் குறி

செம்முது பெண்டிரை வீட்டிற்கழைத்து முறத்திலே பிடிநெல்லையிட்டு, எதிரே தலைவியை நிறுத்தி தெய்வத்திற்குப் பிரப்பி வழிபட்டு அந்நெல்லை நன்னான்காக எண்ணுவர். இறுதியில் ஒன்று, இரண்டு அல்லது மூன்று நெல்மணிகள் எஞ்சி இருந்தால் முருகன் அணங்கியது என்றும், நான்கு நெல்மணிகள் எஞ்சி இருந்தால் பிறிதொரு நோய் என்றும் முதுபெண்டிர் கூறுவர். இக்கட்டுக்குறி கூறும் முதுபெண்டிரைக் **"கட்டுவச்சி"** எனப் பெயரிட்டு அழைத்தனர்.

ii. கழங்குக் குறி

குறி சொல்பவன், தன் தலையிலே ஓர் ஆடையைச் சுற்றி ஒருபுறம் தொங்கும்படி செய்து, பல தண்டுகளையுடைய மரக்கோலை கையில் ஏந்தி காட்சியளிப்பான். கைக்கோளிலுள்ள ஒவ்வொரு தண்டிலும் சிறு பைகளைக் கட்டித் தொங்கவிட்டு, முருகன் முன்னிலையில் சிதறப் போட்ட கழற்சிக் காய்களைத் தன் கைக்கோளிலுள்ள பைகளால் வாரியெடுக்கும் போது குறிப்பாகத் தோன்றிய சில செய்திகளைப் பிறருக்கு எடுத்துரைப்பான். இதுவே **"கழங்குக் குறி"** எனப்பட்டது. இக்கழங்குக் குறி கூறுபவனை **'வேலன்'** என்றும், அவன் கையிலுள்ள மரக்கோலை **'வேல்'** என்றும் பெயரிட்டு வழங்கினர்.

"வெறியறி சிறப்பின் செவ்வாய் வேலன்
வெறியாட்டு அயர்ந்த காந்தளும்" (**தொல்.பொருள்.**63: 1-2)

எனக் காந்தள் மலரை அணிந்துகொண்டு வேலன் வெறியாடுவதாகத் தொல்காப்பியர் கூறுகிறார். வேலனால் நிகழும் வெறியாட்டு **'வேலனாடல்'** என்றும் கூறப்படுகிறது (நாகசாமி, இரா. 1983, ப.108). தலைவனைப் பிரிந்து வருந்துவதால்

தலைவிக்கு ஏற்பட்டுள்ள பசலை நோயை அறியாத செவிலித்தாய் இவ்வேலனை அழைத்தே வெறியாட்டுமாறு கூறுவாள். இதனைக் கபிலரின் களவியல் பாட்டு,

"விறலிழை நெகிழ்த்த வீவருங் கடுநோ
யகலு ளாங்க ணறியுநர் வினாயும்" (குறிஞ்சிப்பாட்டு: 3-4)

வழியாக அறியமுடிகிறது. இதனை **"வெறியாட்டு இடத்து வெருவின் கண்ணும்"** (**தொல்.பொருள்.**109:23) எனக் களவில் தலைவிக்குரிய கூற்றாகத் தொல்காப்பியர் கூறுகிறார்.

முடிவுரை

மரங்கள், பறவைகள், விலங்குகள் போன்ற பிற உயிரினங்களின் செயல்களையும், அவற்றின் ஓசைகளையும் தங்களது வாழ்வில் நிகழப்போகும் நன்மை மற்றும் தீமைகளின் முன்னறிவிப்பாகச் சங்ககால மக்கள் நம்பினர். துணங்கைக் கூத்தை ஆடிமகிழும் பேயின் உருவத்தையும், அக்கால மக்களின் நம்பிக்கைகளையும் மதுரைக்காஞ்சி, திருமுருகாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை மற்றும் சிறுபாணாற்றுப்படைப் பாடல்கள் வழியாகப் புலவர்கள் காட்சிப்படுத்தியுள்ளனர். வேலனின் வெறியாட்டுதல் நோயைக் குணப்படுத்தும் என்ற நம்பிக்கையும் மக்களிடம் காணப்பட்டதை **'இயற்கைப் பாட்டு'** என அழைக்கப்படும் பத்துப்பாட்டு வழியாக அறியமுடிகிறது.

துணைநூற்பட்டியல்

1. சாமிநாதையர், உ.வே. (1986). பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியார் உரையும். தஞ்சாவூர்: தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம்.
2. சுப்பிரமணியன், ச.வே. (2009). மதுரைக்காஞ்சித் தெளிவுரை. சிதம்பரம்: மெய்யப்பன் பதிப்பகம்.
3. சாமி சிதம்பரனார். (1986). பத்துப்பாட்டும் பண்டைத் தமிழகமும். சென்னை: சாமி சிதம்பரனார் இலக்கிய நிலையம்.
4. திருஞானசம்பந்தம், ச. (2018). தொல்காப்பியம் பொருளதிகாரம் மூலமும் உரையும். திருவையாறு: கதிர் பதிப்பகம்.
5. நாகசாமி, இரா. (1983). அகராதி நிகண்டு. சென்னை: டாக்டர். உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம்.
6. பவானந்தம்பிள்ளை, ச. (1925). தற்கால தமிழ்ச்சொல்லகராதி. சென்னை: மாக்மில்லன் & கம்பெனி லிமிடெட்.
7. மறைமலையடிகள். (1903). முல்லைப்பாட்டு ஆராய்ச்சியுரை. சென்னை: தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்.

8. மாணிக்கவாசகம், ஞா. (2002). பத்துப்பாட்டு மலைபடுகடாம் மூலம் - விளக்க உரையுடன். சென்னை: உமா பதிப்பகம்.
9. ஜகந்நாதன், கி.வா. (1970). திருமுருகாற்றுப்படை விளக்கம். சென்னை: அமுத நிலையம் லிமிடெட்.

REFERENCES

1. Jagannathan, K.V. (1970). Thirumurugatrupadai: With Commentaries, Chennai: Amuda Nilayam Ltd.
2. Manickavasagam, Gna. (2002). Pathupaattu Malaipadukadaam Moolam - Vilakka Uraiyudan. Chennai: Uma Pathipagam.
3. Maraimalai Adigal. (1903). Mullaipattu Araichiurai. Chennai: The South India Saiva Siddhanta Works Publishing Society.
4. Nagasamy, R. (1979). Agarathi Nigandu. Chennai: Dr. U.V. Saminathayyer Nool Nilayam.
5. Pavananthampillai, S. (1925). Tharkaala Thamizhsol Agaraadhi. Chennai: Macmillan Publishers Ltd.
6. Sami Chidambaranar. (1986). Pathupaattum Pandaith Thamizhagamum. Chennai: Sami Chidambaranar Ilakkiya Nilaiyam.
7. Subramanian, Sa.Ve. (2009). Mathuraikkanji Thelivurai. Chidambaram: Meiyappan Pathippagam.
8. Swaminatha Iyer, U. V. (1986). Pattupaattu Moolamum Nachinarkiniyar Uraiyum. Thanjavur: Tamil University Veliyeedu.
9. Thirugnana Sambanthan, S. (2018). Tholkappiyam porulatikaram Moolamum Uraiyum. Thiruvaiyaru: Kathir Pathipagam.